# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 4 | ஏப்ரல் 1991 | இதழ் 4



வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை
செவ்வாய் : மாலை 7-15—8-30...ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)
புதன் : மாலை 3-30—5-00. சகோதரிகள் ஐக்கிய கூட்டம் (ஒருவாரம்விட்டு ஒருவாரம்)
வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
சனி : மாலை 7-00 9-00...மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


1. 'கிறிஸ்தவன்' என்று மட்டும் கூறிக் கொள்வதில் என்ன சங்கடம்? 1-9
2. தற் பரிசோதனை 10-16
3. என்னிடமிருந்து தேவன் என்ன எதிர் பார்க்கிறார்? 17-20
4. ஒரு சிறந்த மனைவி - தாயின் பண்புகள் 21-26
5. உயிர் இரத்தத்தில் இருக்கிறது. 27-28

# THIRUMARAIAASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 4. April—1991 Issue 4


ஆசிரியவுரை :

## 'கிறிஸ்தவன்' என்று மட்டும் கூறிக் கொள்வதில் என்ன சங்கடம்?

பலவிதக் கொள்கைகளும், சித்தரந்தங்களும் ஒன்றோ, டொன்று மோதிக் கொள்கிற இந்த நாட்களில், எவ்விதமான அடைமொழிகளையும் சேர்த்துக் கொள்ளாமல் வேதம் கூறுகிற-படி 'கிறிஸ்தவன்' என்று மட்டும் கூறிக் கொள்வது நியாயமான காரியம். ஆனால் அதை ஏற்றுக் கொள்வதற்கு நாம் ஏனோ தயங்குகிறோம்.

ஒரு வேளை இன்றைக்குக் கிறிஸ்தவம் பல கூறுகளாகப் பிரிந்து நிற்கும் சூழ்நிலையில் 'கிறிஸ்தவன்' என்று மட்டும் கூறிக் கொள்வது சாத்தியமாக இருக்குமா? என்று யோசிக்கிறோமா? பல பாதைகள் ஒன்றையொன்று குறுக்கிட்டு பல பக்கங்களில் பிரிந்து நிற்கும்போது, எத்திசையில் செல்வது என்று தடுமாறுகிற ஒரு வழிப் போக்கனுக்கு எல்லாமே நல்ல பாதை போன்று தான் தோன்றும் போதாதற்கு ஒவ்வொரு பாதையிலும் சிலர் நின்று கொண்டு, ''இங்கே வாருங்கள்'', ''அதோ அதுதான் நேர்வழி'' என்று கத்தி அழைத்தால் இன்னும் குழப்பமே ஏற்படும்.

அது போன்ற ஒரு நிலை தான் இன்றைக்குக் கடவுளைத் தேடுகிற மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக சிலர் வெறுப்படைந்து, இவைகளில் எதுவுமே சரியில்லை என்று முடி-வுக்கு வந்து கடவுளைத் தேடுவதற்கே மனமில்லாமல் ஒதுங்கிக்

தி-1

கொள்கிறார்கள். இன்னும் சிலர் ''எல்லாமே சரிதான்' என்று எல்லாவற்றிற்கும் தலையசைத்துக்கொண்டு, எந்தவிதமான நோக்கமும், கொள்கையும், குறிக்கோளும் இல்லாமல் காலத்தை ஓட்டிக் கொண்டு இருக்கிறார்கள். வேறு சிலர், நான் எல்லா சபைகளுக்கும் சென்று அவர்களுடைய போதனைகள், ஆராதனை ஒழுங்குகள் அனைத்தையும் கவனிப்பேன், பிறகு எது என் மனதுக்குப் பிடிக்கிறதோ அதில் நான் சேர்ந்து கொள்வேன் என்கின்றனர். எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்கும் இந்த முறை பெரும்பான்மையோருக்குச் சரி என்று தோன்றலாம்.

ஆனால் நமக்கு இருக்கிற இந்தக் குறுகிய வாழ்நாளில் ''நாளொரு கொள்கையும், பொழுதொரு சபையுமாக உதயமாகிக் கொண்டிருக்கிற அனைத்துச் சபைகளின் உபதேசங்களையும், கோட்பாடுகளையும் சோதித்துப் பார்ப்பது என்பது ஆகிற காரியமா? இப்படிப்பட்டவர்கள் தாங்கள் சந்திக்கிற ஏதாவது ஒரு குழுவினரின் தொழுகைமுறை, மற்றும் நடவடிக்கைகளில் மூழ்கி ஈடுபாடு கொண்டு விட்டார்களானால், அப்புறம் அதிலேயே மூழ்கி அதுவே தேவன் தனக்குக் காட்டின சபை என்று கண்மூடித்தனமாக நம்பிக் கொண்டு வேறு எதையும் ஏற்றுக் கொள்ள மறுத்து விடுவார்கள் அவர்களுடைய உபதேசங்கள் வேதாகமத்தின் வெளிச்சத்தில் பார்த்தால் தவறு என்று சுட்டிக் காட்ட முற்பட்டால் கூட அதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்குத் தங்கள் மனதைக் கல்லாக்கிக் கொள்வார்கள். இது தான் இன்றைக்கு மக்கள் மத்தியில் காணப்படும் பக்தி நிலை, இந்த மனப்பான்மை உண்மையை அறிந்து கொள்வதற்கு உதவாது. கிளி ஜோஸ்ய முறையில் மெய்யான மார்க்கத்தைக் கண்டு கொள்ள முடியாது. வேதாகமம் கூறுகிறவைகளைப் படித்துப்புரிந்து கொண்டால் தான் சத்திய மார்க்கத்தை அறிந்து கொள்ள முடியும்.

இது விஷயத்தில் இயேசுவின் அன்பான அழைப்பைக் கேளுங்கள். ''வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

நான் சாந்தமும், மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன் என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்'' (மத் 11:28,29) இந்த அழைப்பில் உள்ள உருக்கத்தையும், கரிசனையையும் கவனியுங்கள். வைக்கோல் போருக்குள் கிடக்கிற ஊசியைத் தேடுவது போன்று ஏராளமான மார்க்க பேத முதலாளிகளின் வார்த்தைகளைக் கேட்டுக் குழப்பமடைவதை விட்டு விட்டு ''நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாக இருக்-

கிறேன் (யோவான் 14:6) என்று கூறும் இயேசுவிடம் நேரடியாகச் செல்வது நன்மைதரும். அவர் ஒருவரே உண்மையானவரும், நீதிபரரும் ஆவார். அவருக்குச் சீடர்களாக விரும்பும் அனைவரும் அவரிடம் நேராக வந்து அவரிடத்தில் கற்றுக் கொள்வது சிறந்தது.

இப்படி நாம் யோசித்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று நமக்கு இன்னொரு சந்தேகம் எழும்புகிறது. தேவனுடைய வசனத்தின் மூலமாக நான் இயேசுவினிடத்தில் வந்து உண்மை வழியைக் கற்றுக் கொள்ள முடியுமா? எல்லா கூட்டத்தாருமே வேதத்தின் வெளிச்சத்தில் நடப்பதாகத் தானே கூறிக் கொள்கிறார்கள்? ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வியாக்கியானம் செய்கிறார்களே! எவ்வளவோ கற்றறிந்த மேதைகள் எல்லாம் புரிந்து கொள்ள முடியாத தேவ இரகசியங்களைப் பேதையாகிய நான் புரிந்து கொள்ள முடியுமா? நான் செல்லுகிற பாதை தான் சரி என்று நான் எதை வைத்து உறுதி செய்வது?

நண்பர்களே, நாம் நினைத்துப் பயப்படுகிற அளவுக்கு விஷயம் அவ்வளவு கடினமானதல்ல. ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தக் காரியம் கல்வியறிவினால் தீர்மானம் செய்யப்படும் விஷயம் அல்ல, அல்லது மனித அறிவினாலும், திறமையினாலும் முடிவெடுக்கும் விஷயமும் அல்ல. இது விசுவாசத்தையும் மனப்பக்குவத்தையும் பொறுத்த விஷயம் காற்றையும், கடலின் அலைகளையும் கண்டு பயப்பட்ட பேதுருவின் விசுவாசத்தைப் போன்ற விசுவாசத்தின் மூலமாக அல்ல, (மத் 14) நம்மைப் பெயர் சொல்லி அழைத்த கர்த்தரின் வல்லமையின் பேரிலும், கைவிடாத தன்மையின் பேரிலும் சார்திருக்கும் விசுவாசம், அவரையும் அவருடைய வழிகளையும் உண்மையாய்த் தேடுகிற ஆத்துமாவை அழிய விடார். ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் தான் கர்த்தர் தம்மை தெளிப்படுத்துவார் என்று எண்ணி மயங்கக் கூடாது. (மத் 11:25; 1கொரி 1:26) ஆவியில் எளிமையுள்ளவர்களுக்கும், தாழ்மையுள்ளவர்களுக்கும், நீதியின்மேல் பசிதாகம் உள்ளவர்களுக்கும், அவருடைய சித்தத்தைச் செய்கிறவர்களுக்கும், அவருடைய சத்தத்துக்குச் செவி கொடுத்துக் கீழ்ப்படிகிறவர்களுக்கும் கூட செவி கொடுக்கிறார். (மத் 5:3-6; யோவான் 7:17;10:4,27) இந்த அர்த்தத்தில் தான் வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களை அழைத்து அவர்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்கிறார். அவருடைய நுகத்தை ஏற்றுக் கொண்டு அவரிடத்தில் கற்றுக் கொள்ள அழைக்கிறார். ஒரு மனிதன் சரியான வழியைக் கண்டு கொள்வதற்கு இது தான் சிறந்த வழி. உங்களுடைய நம்பிக்கையையும், எதிர் காலத்தையும்

கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்து அவரிடத்தில் கற்றுக் கொள்ள முயலுங்கள்.

கல்வியறிவும், திறமையும் அவசியம். அதை வைத்துக்கொண்டு ஆன்மீக காரியங்களில் ஒருவன் மற்றொரு மனிதனுக்கு உதவவே முடியாது என்று நான் வாதிடுவதாக நினைக்க வேண்டாம். ஒரு மனிதன் தன் சக மனிதனுக்குச் செய்யக் கூடிய உண்மையான உதவி கர்த்தருடைய வசனத்துக்கு அவனை வழி நடத்தி, கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக தேவ சித்தம் என்ன என்பதைக் கற்றுக்கொடுப்பதாகும்.

ஒவ்வொருவரும் இவ்விதமாய் வழி நடத்தப்படுவார்களானால், இன்றைக்கு செழித்து வளர்ந்து கொண்டிருக்கிற பல சபைகள் என்ற பெயரில் இயங்கி வரும் போலி ஸ்தாபனங்கள் நிலைகுலைந்து அழிந்து போவது திண்ணம். தங்களுடைய வார்த்தை ஜாலங்களால் படித்தவர்களையும் பாமர மக்களையும் ஒரு சேர மயக்கித் தவறான பாதையில் நடத்திச் செல்லும் மார்க்க பேத முதலாளிகள், தத்துவம் பேசும் வேதாந்திகள், வரம்பெற்ற மகான்கள், சத்தியத்தைச் சுற்றித் தங்கள் சித்தாந்த வலைகளைப்பின்னி பேதைகளை ஈர்க்கிற கலையில் கை தேர்ந்தவர்கள் ஆகியோர் தங்களுடைய போலி சரக்குகளுக்கு மார்க்கெட் இல்லாமல் தடுமாறுவார்கள். உண்மை ஓங்கும், ஒற்றுமை வளரும்.

ஒவ்வொரு மனிதனும் தாங்களாகவே தங்கள் வேதாகமத்தை வாசிக்க முற்பட்டால் ஆளுக்கொரு விதமான அபிப்பிராயம் தோன்றி மேலும் பிரிவினைகளும் குழப்பங்களும் அதிகம் ஆகும் என்று ஒரு சாரார் வாதிடக்கூடும். ஆனால் அது தேவையற்ற பயம். தேவனுடைய வார்த்தையை விட்டு விலகியும், கூட்டியும், குறைத்தும் மாந்த அறிவைப் பயன்படுத்தித் தவறுதலாக வியாக்கியானம் செய்வதால் தான் பிரிவினை உண்டாகிறதேபொழிய தேவனுடைய வசனத்தை வாசித்து தியானிப்பதினால் அல்ல.

மேலும் பிரிவினைகளும், குழப்பங்களும் முனைத்து செழித்து வளர்வது எப்பொழுது என்றால் விசுவாசிகள் என்பவர்கள் தங்கள் போதகர்களையும் குருமார்களையுல் கண்மூடித்தனமாய் பின்பற்றுவதினாலும் பரிசுத்த வேதாகமத்தைப் பகுத்துப் படிக்காதிலும் தான். விசுவாசிகள் திறந்த மனதுடன் இயேசுவிடம் வந்து கற்றுக் கொள்வார்களானால் சத்தியத்தைப் பற்றி ஒருமித்த கருத்து ஏற்பட்டு ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு ஒத்த மனமுடையவர்களாய் ஒன்றாக இருப்பார்கள்.

உலகத்திலுள்ள எல்லா மதங்களிலும், மார்க்கங்களிலும் சில உண்மைகள் இருக்கின்றன என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால்

மெய்க் கிறிஸ்தவ மார்க்கமே அனைத்து உண்மைகளையும் உடையதாக இருக்கிறது என்பதை நாம் அடித்துக் கூறுகிறோம். **'அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது**. என்கிறார் பவுல் (கொலோ 2:3) ஆகவே ஒரு கிறிஸ்தவன் வேதாகமத்தை எடுத்து அனுதினமும் வாசித்து காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று ஆய்ந்து பார்க்கிற மனப்பக்குவம் அடைய வேண்டும். அப்பொழுது சத்தியம் அவனை விடுதலையாக்கும் (யோவான் 8:32) அப்பொழுது மனிதனால் உண்டாக்கப்பட்ட சட்ட திட்டங்களுக்குச் சப்பைக் கட்டுக் கட்ட வேண்டியதில்லை அவன் எந்த ஒரு மனிதனையும் 'ரபீ' என்று அழைக்க வேண்டியதில்லை. பூலோகத்தில் ''தந்தை'' என்ற பட்டம் உள்ளவர்களை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை, கிறிஸ்து ஒருவரே குருவும் ஆசானுமாக இருக்கிறார். தேவனே பிதாவாக இருக்கிறார். (மத் 23:8-10) மத உலகத்தை அடிமை கொண்டிருக்கும் மனிதப் பாரம்பரியங்களும், கொள்கை கோட்பாடுகளும் அவனை அனுகுவதில்லை. இந்த அடைமொழிகளை உதறித் தள்ளி விடுகிற தேவனுடைய பிள்ளைகள் வேதாகமத்தைத் திறந்து மனதுடன், மாந்த அறிவினால் பின்னப்பட்ட அனைத்துத் தவறான உபதேசங்களையும் அறுத்துக் கொண்டு புதிய சிந்தையோடு கிறிஸ்துவின் தூய உபதேசதைப் பருகி மகிழ்கிறார்கள். எதுவும் எழுதப்படாத-மாந்த அறிவால் கறைப்படாத சுத்தமான இதயத்தை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுக்கிறார்கள். தேவன் கட்டாத இடத்தில் கட்டும் சித்து விளையாட்டுக்காரரர்கள் கட்டுத் திட்டங்கள் என்ற மூலாம் பூசி. தங்கள் கள்ள போதகங்களை இதமாக உள் நுழைத்து தந்திரமாய்ப் பிடிக்க வகை தேடும் பொல்லாதவர்களின் சூழ்ச்சி வலைக்குச் சிக்கமாட்டார்கள். அவர்களுடைய இச்சகப் பேச்சில் மயங்கி, அறிவிழந்து, பேதைகளாக மாட்டார்கள். மஞ்சள் கண்ணாடி அணிந்தவர்களைப் போல தேவனுடைய செம்மையும், எளிமையுமான வசனங்களுக்கு விதவிதமான அர்த்தங்களைக் கற்பனை செய்து தங்கள் எண்ணங்களையும் சிந்தனையோட்டங்களையும் களங்கப்படுத்திக் கொள்ள மாட்டார்கள். இந்தக் கள்ளப் போதகர்களுக்கு எச்சரிக்கையாயிருக்கும்படிக்கு கொலோசே பட்டணத்து விசுவாசிகளுக்கு அப்போஸ்தலன் பவுல் அறிவுரை கூறுவதை வாசியுங்கள்.

**''ஒருவனும் நயவசப்பினாலே உங்களை வஞ்சியாதபடி இதைச் சொல்லுகிறேன்.**

''ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே, அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும் அவர்மேலே கட்டப் பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து

கொண்டு நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுவீர்களாக! லௌதிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும், உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல''. (கொலோ 2:4, 6–8)

### பிரச்சனையின் உண்மைநிலை

ஒருவன், மார்க்க சம்பந்தமான விஷயங்களில் தனக்கு இஷ்டமானதைத் தெரிந்து கொள்ளலாம். அது அவரவருடைய ருசிக்கும், அபிப்பிராயத்துக்கும் அடுத்த காரியம் என்ற நிலையிருந்தால் நாம் அதைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. ஒருவன் தனக்கு விருப்பமான ஒரு கொள்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதை உண்மையாய்க் கடைபிடித்து வந்தால் அதனால் கிடைக்கும் நன்மைகள் போதும். ஆனால்,'' ''மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு அதன் முடிவோ மரண வழிகள்'' என்று ஞானி சாலமோனும், (நீதி 14:12) ''கர்த்தாவே மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும் நான் அறிவேன்'' என்று தீர்க்கன் எரேமியாவும் (எரே 10:23) சொல்லுகிறார்களே! அதை எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்தீர்களா?

பெரும்பான்மையான மக்கள் எம்மதமும் சம்மதம். ஒருவன் ஏற்றுக் கொண்ட கொள்கையில் உண்மையுள்ளவர்களாக இருந்தால் அது போதும் என்று சுயதிருப்திப் பட்டுக் கொள்கின்றனர். ஆனால் மேற்காட்டிய தேவ வசனங்களின் அடிப்படையில் பார்க்கும் போது, மார்க்க சம்பந்தமான காரியத்தில் மனிதனுடைய தத்துவங்கள் சித்தாந்தங்கள் எல்லாம் சரிப்பட்டு வராது என்பதற்கு மற்றும் ஒரு நிருபணம். அந்த நாட்களில் ''அநேகர் இயேசுவினிடத்தில் வந்து நாங்கள் உம்முடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோமே, அநேக அற்புத அடையாளங்களைச் செய்தோமே என்று சொல்லுவார்கள். உங்களை ஒருக்காலும் அறியேன்; அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள்'' என்று கூறுவேன் என்கிறார் (மத் 7:22,23) மேலும் அவர் ''நான் செல்லிய இந்த வசனங்களைத் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ'' (போதகர்களும், மதத்தலைவர்களும் கட்டளையிட்டவைகளை அல்ல) ''அவன் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன் செய்யாமல் இருக்கிறவன் எவனோ அவன்தன் வீட்டை மணலின்

மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்'' மத் 7:21-27 என்று தன் தீர்ப்பை வழங்குகிறார்.

ஆகையால், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று ஒரு மனிதனோ அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட மதச்சட்டங்களோ, சித்தாந்தங்களோ (பார்வைக்கு அவைகள் எவ்வளவு நல்லவைகளாகவும், நடைமுறைக்குப் பொருத்தமாக இருப்பினும் சரி) நியாயத்தீர்ப்பு நாளிலே செல்லுபடி ஆகாது - கிறிஸ்து சொன்ன வசனத்தின்படியே நியாயந்தீர்க்கப்படுவோம். (யோவான் 12:48) ஆகையால் கிறிஸ்துவினுடைய வார்த்தைகளை அலட்சியம் செய்கிற எவனும் தனக்குப் பெரும் நஷ்டத்தையும், சொல்லி முடியாத இழப்பையும் அடைவது நிச்சயம்.

## அப்படியானல் நாம் எப்படி அடைமொழிகள் ஏதும் இல்லாத கிறிஸ்தவனாகலாம்?

இதை வாசிக்கும் எவராவது கிறிஸ்தவர் ஆக விரும்பினால், தேவனுடைய பிள்ளையாக கிறிஸ்துவின் தொண்டனாக ஆவதற்கு அப்போஸ்தலர் காலத்தில் ஒருவன் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அவைக்ளைச் செய்தல் அவசியம். (அப் 2-ம் அதிகாரம் 36-41) ஆகிய வசனங்களில் அதற்குரிய வழி முறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை வாசித்து விசுவாசியுங்கள், கீழ்ப்படியுங்கள் ''பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்து கொள்ளுங்கள் என்று புத்தி சொன்னான்.

அவனுடைய வார்த்தைகளை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

இங்கே சொல்லப்பட்டிருக்கிற வழி முறைகள் தவறே, சரியான வழி மட்டும் அல்ல, மிகவும் எளிமையானவைகளும் கூட, இது கர்த்தருடைய வழி, இதனுடைய சுலபமான மாதிரியைப் பின்பற்றுங்கள். அப்போஸ்தலர்களுடைய பேரடிப் பார்வையில் சுமார் 1900 ஆண்டுகளுக்கு முன்பாக மக்கள் இவ்வாறாகத்தான்

கிறிஸ்தவத்தைத் தழுவினார்கள். அதே போல ஒரு மனிதன் இந்த விசுவாச உபதேசச் சட்டத்துக்குக் கீழ்ப்படியும்போது 'கிறிஸ்தவன்', என்றில்லாமல் வேறொன்றாகவோ, அல்லது 'கிறிஸ்துவின் சபை' என்றில்லாமல் வேறொரு மனிதரால் உருவாக்கப் பட்ட நிறுவனங்களில் ஒன்றிலோ சிக்கிக் கொள்வது கிடையாது. அதன் பிறகு அவர் பரிபூரணத்தை நோக்கி நடை போடலாம். திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலையும், கடினமான ஆகாரத்தையும் உண்டு கிறிஸ்துவைப் போல வளருவான். (1 பேதுரு 2:1-3; (2 பேதுரு 2 3:18

அப்போஸ்தலர்களின் நடபடிப் புஸ்தகத்தில் இந்த காரியங்களைக் குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த விஷயத்தில் யாருக்கேனும் குழப்பம் இருந்தால் ஒரு நல்ல ஒத்த வாக்கிய அகராதியை (Concordance) எடுத்து திருமுழுக்கு என்ற தலைப்பில் உள்ள அனைத்து வசனங்களையும் வாசித்து சீர்தூக்கிப் பார்க்கக் கடவன். எவ்விதமான கருத்துக்களையும் முன்கூட்டியே தன் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளாமல் வேதம் சொல்லுகிறதை மாத்திரம் ஏற்றுக் கொள்ள விரும்பும் பக்குவமுள்ள மனங்களில் தேவ வசனம் சரியான தெளிவைக் கொடுக்கும். திருமுழுக்கு என்பது தண்ணீரில் முழுகி எழுவதையே குறிக்கும் என்பதைச் சந்தேகத்துக்கிடமின்றி அறியலாம். தேவ வசனம் சொல்லுவதை நம்பி, ஏற்றுக் கொண்டு அதற்கே கீழ்ப் படிவோம்.

சபை சம்பந்தப்பட்ட விஷயத்திலும் அதே நிலை தான். வேத வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது ஒரு சபை தான். ''உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு.

''ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு. அவர் எல்லார் மேலும், எல்லோரோடும், உங்கள் எல்லோருக்குள்ளும் இருக்கிறவர். எபே 4:4-6.''

அப்போஸ்தலர் காலத்தில் கர்த்தர் எப்படி இரட்சிக்கப் பட்டவர்களைச் இந்த ஒரே சனபக்குள் சேர்த்துக் கொண்டாரோ அப்படியே இப்பவும் செய்வார். (அப் 2:42) மார்க்க சம்பந்தமான எல்லா விஷயத்தைக் குறித்தும் வேதம் தெளிவான முறையில் பேசுகிறது. ஆகவே மனிதர்கள் அந்த உறுதியான அஸ்திபாரத்தின் மேல் நின்று கொண்டு, தேவன் ஒருவருக்கு மட்டுமே கீழ்ப்படிகிறவர்களாகவும், அவருடைய வசனத்தின் அடிப்படையில் காரியங்-

களைச் செய்து, மாந்த அறிவு சடங்காச்சாரம், பாரம்பரியம் ஆகியவைகளுக்குச் செவி கொடுக்காமல் கிறிஸ்துவின் மென்மையானதும் இலகுவானதும் ஆன நுகத்தை மாத்திரம் ஏற்றுக் கொண்டு நம்முடைய ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கச் செய்வோமாக! இது ஒவ்வொரு மெய்க்கிறிஸ்தவனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற சிலாக்கியமும், அழைப்புமாகும், சிந்திப்பீர், செயல்படுவீர்!

**E.Z செல்வநாயகம்**

## ஓர் தகப்பனின் அனுபவ ரீதியான அறிவுரை

என் மகனே, என் போதகத்தை மறவாதே; உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக் கடவது.

அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும் தீர்க்காயுசையும்; சமாதானத்தையும் பெருகப் பண்ணும்.

கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாதிருப்பதாக. நி அவைகளை உன் கழுத்திலே பூண்டு அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக் கொள்,

அதனாலே தேவனுடைய பார்வையிலும்,: மனுஷருடைய பார்வையிலும், தயையும், நற்புத்தியையும் பெறுவாய்.

உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருந்து

உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள் அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்.

நீ உன்னை ஞானியென்று எண்ணாதே, கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு

அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்புகளுக்கு ஊனுமாகும்.

உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற் பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணும்,

அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும் உன் ஆலைகளில் திராட்சை ரசம் புரண்டோடும்

என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்து கொள்ளும்போது சோர்ந்து போகாதே.

தகப்பன் தான் தேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறது போல், கர்த்தரும் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்.

நீதி 3:1-12

# தற் பரிசோதனை

**நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ என்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறி-யீர்கள்.** *(2கொரி 13:5) கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்-வதைக்குறித்தும் கூட அப்பத்தை எடுத்துப் புசிப்பதற்கு முன்னும் திராட்சைப்பழச் சாற்றை பருகுவதற்கு முன்பும் அதை அபாத்திர-மாய் புசிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று அறிவுறுத்து கிறார். அதாவது நம்முடைய வாழ்க்கையில் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படாமல் இருந்தால்; நம்முடைய எண்ணத்தில் களங் கம் இருந்தால், நாம் அவைகளைக் களைந்து போட்டபிறகே கர்த்-தருடைய பந்தியில் கையிட வேண்டும். இதைக் குறித்து வெகு காலத்துக்கு முன்பே தாவீது அரசன்* **கர்த்தாவே, என்னை பரீடசித்து என்னைச் சோதித்து பாரும்** *(சங் 26;2) என்று கூறியுள்ளார்.*

*ஆகவே நாம் கர்த்தருடைய காரியத்தில் எங்கே நிற்கிறோம் என்று அடிக்கடி நாம் நம்மை சோதித்து பார்த்து; நாம் இருக்க வேண்டிய பிரகாரம் கர்த்தருக்கு முன் உண்மையும் உத்தமுமாய் இருக்கிறோமோ என்று பரீட்சித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதின் மூலமாக நம்முடைய குறைவுகளையும் இய-லாமைகளையும் நாம் தெரிந்து கொண்டு நாம் எங்கே தவறியிருக்-கிறோமோ அதை சரி செய்து கொள்வதற்கும் நம்மை மீண்டும் ஆண்டவருக்கு முன்பாக நிலைநிறுவதற்கும் உதவியாக இருக்கும், கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லுங் கள் மற்றவர்களுக்காக அல்ல, உங்களுக்கும் தேவனுக்கும் தெரிந்-தால் போதும். அந்த கேள்விகளுக்குரிய சரியான பதில்கள் பின் னாலே கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் கொண்டிருக்கும் அபிப்-பிராயத்திற்கு அவைகள் கொஞ்சம் வித்தியாசமாக இருந்தால் அவைகளை சரி செய்து கொள்வது நன்மை தரும். இந்தக் கேள்வி-கள் உங்கள் மனதைப் புண்படுத்துவதற்கோ, அல்லது சங்கடத்தில் ஆழ்த்துவதற்கோ அல்ல, நீங்கள் கர்த்தருக்கு மேலும் உண்மை-யுள்ளவர்களாக இருக்க உதவுவதற்கே என்று நினைத்து பதில் அளி-யுங்கள்.*

1) நற்செய்தி அல்லது சுவிஷேசம் என்றால் என்ன?

2) சுவிஷேசத்தின் பல்வேறு கூறுகளை விளக்க முடியுமா?

3) சுவிஷேசத்தின் கட்டளை எது?

4) இரட்சிக்கப்படுவதற்கு ஒருவன் என்ன செய்ய வேண்டும்?

5) திருமுழுக்கு ஏன் அவசியம்?

6) சபை என்றால் என்ன?

7) கிறிஸ்துவுக்கு எத்தனை சபைகள் உண்டு?

8) நீங்கள் சபையின் அங்கமா?

9) இரட்சிக்கப்பட்டுப் பரலோகம் செல்லுவதற்கு ஒருவர் சபையில் அங்கமாக இருக்க வேண்டுமா?

10) சபையில் யார் சேர்த்துக் கொள்கிறார்?

11) வேத எழுத்துக்களின்படி சபையின் பெயர் என்ன?

12) ''இது என் சபை'', இது நம்முடைய சபை'', ''சபைக்கு-போகிறேன்'' என்றெல்லாம் சொல்வது அர்த்தமுள்ளதா?

13) வாரத்தின் எந்த நாளில் கிறிஸ்தவர்கள் சபையாக கூடி வருகிறார்கள்?

14) எந்தெந்த நாட்களில் நீங்கள் சபையில் கலந்து கொள்கிறீர்கள்?

15) நீங்கள் தினமும் வேதம் வாசிக்கிறீர்களா?

16) நீங்கள் குறைந்த பட்சம் பத்தில் ஒரு பாகத்தையாவது கர்த்தருக்கு கொடுக்கிறீர்களா? (மத் 5:20)

17) நீங்கள் கர்த்தருக்குத் கொடுக்கிற அளவை வைத்துப் பார்த்தால் கர்த்தர் உங்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுப்பது நியாயமாக இருக்கும்?

18) எப்படிப்பட்ட இசைக்கருவிகளை ஆராதனையின் போது உபயோகிக்க வேண்டும் என்று தேவன் விரும்புவார்?

19) நாம் ஏன் பரமண்டல ஜெபம் என்று அழைக்கப்படும் கர்த்தருடைய ஜெபத்தை இப்பொழுது சொல்ல வேண்டியதில்லை?

20) மோசேயின் நியாயப்பிரமாணம் கிறிஸ்தவர்களை கட்டுப்படுத்துமா?

21) கிறிஸ்தவ வாழ்க்கை நெறியில் நடவுங்கள் என்றால் எப்படி?

22) அன்பைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

23) சபைக் காரியங்களில் நீங்கள் ஈடுபாடு கொள்கிறீர்களா?

24) நீங்கள் உங்களுடைய நண்பர்களுக்கு சுவிஷேசம் அறிவித்தது உண்டா?

25) நீங்கள் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை வாழுகிறீர்களா?

நீங்கள் சபையில் அங்கமாக இருப்பது என்றால் என்ன? என்றும் கிறிஸ்தவன் என்றால் யார் என்றும் கர்த்தருடைய வேதம் கூறும் காரியங்களை அறிந்திருந்தால் மேற்கண்ட கேள்விகளுக்குப் பதில் கூறுவது சுலபம். அதற்குச் சரியான விடை என்ன என்பதை நாம் கீழே பார்ப்போம்.

1) சுவிஷேசம் என்றால் நற்செய்தி என்று அர்த்தம் ரோமர் (10:15)

2) சுவிஷேசம் என்கிற அந்த நற்செய்தி இயேசுவின் அடக்கம், மரணம், உயிர்த்தெழுதல் ஆகும் (1 கொரி 15:1-4.)

3) சுவிஷேசத்தின் கட்டளைகள் என்று சொல்லப்படுபவைகள் விசுவாசம், மனந்திரும்புதல், இயேசுவே தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுதல், திருமுழுக்கு ஆகியவைகள் ஆகும். (மாற்கு 16:15,16; மத் 10:32; அப் 2:38).

4) ஒருவர் சுவிசேஷத்திற்கு கீழ்படிய வேண்டும். மாற்கு 16:15,16.

5) திருமுழுக்கு என்பது சுவிசேஷத்தின் கட்டளை என்று பார்த்தோம். ஒருவர் விசுவாசித்து மனந்திரும்பி கிறிஸ்துவை அறிக்கை செய்தால் திருமுழுக்கு ஒருவனைக் கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது சபையில் அங்கமாக்குகிறது. (ரோமர் 6 : 3,4 I கொரி 12:13) மேலும் கர்த்தருக்கு கீழ்படியும்போது ஒருவன் பாவத்துக்கு மரிக்கிறான். ஞானஸ்நானத்தின் போது தண்ணீரில் அடக்கம் செய்யப்படுகின்றான். அது இயேசுக்கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலின் சாயலாக இருக்கிறது. ரோமர் 6 ஆம் அதிகாரத்தை வாசிக்கவும் முடிவாக திருமுழுக்கின் போது தண்ணீரிலிருந்து வெளியேறி புதிய பிறப்படைகிறான். அதை யோவான் 3:3-5ல் உள்ள வசனப்பகுதியில் வாசிக்கிறோம்.

6) சபை என்றால் அழைக்கப்பட்டவர்களின் கூட்டம். அதாவது உலகத்தின் ஆசாபாசங்களிலிருந்து விலகி கிறிஸ்துவைப் பின் பற்றுகிறவர்களாகிறார்கள். இரட்சிக்கப்பட்ட மக்களின் கூட்டம் (அப் 2:41 எபே 5:23) யோ 15:19,

7) கிறிஸ்து கட்டினது ஒரே சபை (எபே4:5 கொலோ 1:18, எபே 1:22,23.)

8) நீங்கள் இரட்சிக்கப்பட்டிருந்தால் நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கமாயிருக்கிறீர்கள். ஏனெனில் இரட்சிக்கப்படுவர்களை கர்த்தர் சபையில் சேர்க்கிறார். (அப் 2:41)

9) ஆம், சபை உங்களை இரட்சிக்காது ஆனால் கிறிஸ்து சபையாகிய சரீரத்துக்கு தலையாகவும் இரட்சகராகவும் இருக்கிறார். ஆகவே நாம் இரட்சிக்கப்படவேண்டுமென்றாலும், பரலோகம் செல்ல வேண்டுமென்றாலும் (கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்க வேண்டும். (அப் 2:47 எபே 5:23)

10) இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் சபையில் சேர்த்துக் கொள்கிறார். அப் 2;47

11) இரட்சிப்பு அவருடைய பெயரில் இருக்கிறபடியால் சபை அவருடைய பெயரைத் தரித்துக் கொண்டிருக்கிறது (அப்-4:12) உலகின் பல்வேறு இடங்களில் இயங்கிவரும் சபைகள் கிறிஸ்துவின் சபைகள் என்றும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைந்திருக்கும் சபை கிறிஸ்துவின் சபையென்றும் அழைக்கப்படுகிறது. (ரோ 16:16) அதை தேவனுடைய சபை என்றும் சொல்லலாம் (அப் 20:28) தேவனுடைய வசனத்தில் சபையை குறிப்பதற்கு சில மாற்றுப் பெயர்கள் உண்டு. அவைகளின் படியும் கூட அழைக்கப்படலாம்.

12) இல்லை. அது நம்முடைய சபை அல்ல, நான் சபைக்கு போகிறேன் என்று கூறுவதும் பொருந்தாது. ஏனெனில் கட்டிடம் சபை அல்ல நாம் தொழுகைக்காக சபை கூடி வருகிற இடத்துக்கு போகிறோம் என்று சொல்லுவதுதான் பொருந்தும் (I பேதுரு 4:11)

14) ஒரு வாரத்தில் எத்தனை முதலாம் நாள் இருக்கிறது? ஆகவே அந்த ஒரே நாள் தான் தொழுகைக்காக நாம் கூடி வர வேண்டும். நாம் சபை கூடி வருவதை விட்டுவிடக்கூடாது என்று வேதாகமம் கூறுகிறது. எபி. 10:25

5) தேவன் ஒவ்வொரு நாளும் நம்மோடு பேசும்படி அனுமதிக் வேண்டும் 2 தீமோ 2:15 (எபி 1:1, 2 ரோ 10:17)

6) நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிற அளவுச்கு ஒவ்வொரு வாரத்தின் முதலாம் நாளிலும் நாம் கர்த்தருக்கு கொடுக்க வேண்டும். (I கொரி 16:2; II கொரி 9:7 அது தசம பாகத்தை காட்டிலும் அதிகமாக இருப்பது நல்லது மத் 5:20

17) நாம் கர்த்தருக்கு கொடுப்பதை வைத்து தேவன் நமக்கு கொடுத்தால் நாம் அதிகமாக பெற்றுக் கொள்ள முடியாது. உதாரணமாக நாம் மாதத்துக்கு ரூ. 2000/— சம்பாதிப்பதாக வைத்து கொள்வோம். நாம் மாதம் ரூ. 50 தான் காணிக்கையாக கொடுக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அது பத்தில் ஒரு பாகம் ஆகுமா? தேவன் நாம் கொடுப்பதற்குத் தகுந்த மாதிரி நம்மை ஆசீர்வதிக்க ஆரம்பித்தார் என்று வைத்துக் கொள்வோம் அப்படியா-னால் நம்முடைய மாத வருமானம் ரூ. 2000 ஆக இருக்-காது. ரூ. 500 ஆகத்தான் இருக்கும். அப்படி தேவன் உங்கள் வருமானத்தைக் குறைப்பாரானால் நீங்கள் மகிழ்ச்சி அடை வீர்களா? ஆகவே கர்த்தருடைய ஆலோசனையைப் பரி-பூரணமாய் விசுவாசித்து நாம் கர்த்தருக்குத் தாராளமாய் கொடுத்து அவருடைய ஆசீர்வாதத்தை அபரிதமாய் பெறு-வோம்.

18) கர்த்தரை நாம் பாடி அவரைப் போற்றி துதிக்க வேண்டும் என்று விரும்புகிறார். அப்படியானால் நமக்குக் கொடுக்கப்-பட்ட இன்மையான குரலில் பாடவேண்டும் என்று தான் அர்த்தம். (எபே 5:19 கொலோ 3:16) மற்ற வாத்தியக் கருவிகளை நாம் ஆராதனையில் பயன்படுத்தலாகாது.

19) கர்த்தருடைய ஜெபம் என்று ஒன்று இல்லை. ஏனெனில்நாம் பரமண்டல ஜெபம் என்றும் கர்த்தருடைய, ஜெபம் என்று சொல்லப்படுவதும், கர்த்தருடைய ஜெபம் அல்ல. மத்தேயு 6;9-13 வரை இயேசு தம்முடைய சீடர்களுக்கு கற்பித்த மாதிரி ஜெபமே. **''உம்முடைய இராஜ்யம் வருவதாக''** என்று சொற்றொடர் இராஜ்ஜியமாகிய சபை ஏற்கனவே வந்துவிட்டது. அதாவது ஸ்தாபிக்கப்பட்டாயிற்று. மேலும் இப்பொழுது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் மத்திய-ஸ்தர் மூலம் ஜெபத்தை ஏறெடுக்க வேண்டியுள்ளது.

20) இயேசுகிறிஸ்து சிலுவை மரணத்தின் மூலம் பழைய பிர-மாணமாகிய மோசேயின் பிரமாணத்தை எடுத்துப் போட்டு, புதியதும், சிறந்ததுமான புதிய பிரமாணத்தைக் கொடுத்து விட்டார். ஆகையால் மோசேயின் பிரமாணம் அகற்றப்பட்டு விட்டது. மத் 5:17; எபி 10:9,10; எபி 9:16,17 எபி 1:1,2.

21) **ஒருவன் என்பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை அனு-தினமும் எடுத்துக் கொண்டு என்னை பின்பற்றக் கடவன்** என்றார் லூக்கா 9:23

அதாவது தன் சரீரத்தை பரிசுத்தமும் கர்த்தருக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும். (ரோமர் 12:1) மரண-பரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்,

வெளி 2:10.

22) அன்பு கூருவது என்றால் மற்றவர்களுடைய நலனில் அக்கரை கொள்வது. அவர்களுக்கு என்னென்ன வகையில் உதவ-முடியும் என்று யோசித்து செயல்படுவது (மத் 22:37-39)

23) நீங்கள் விசுவாசத்தில் நிறைந்த நபர் என்றால் சபையின் காரியங்களில் அக்கரை காட்ட வேண்டும். அவ்வப்போது சபைகளில் நடக்கும் நிகழ்ச்சிகளில் உங்கள் பங்கைச் செய்ய வேண்டும். **ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிறபிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து நீங்கள் உறுதிப் பட்டவர்களாவும் அசையாதவர்களாவும் கர்த்தரு-டைய கிரியையாலே எப்பொழுதும் பெருகுகிறவர் களாயும் இருப்பீர்களாக** (I கொரி 15:58) என்று பவுல் அடியார் கூறுவதை சிந்தித்துப் பாருங்கள்.

4) நீங்கள் உங்கள் நண்பர்களுக்கும், சுற்றத்தாருக்கும் சுவிஷே சத்தை அறிப்பது அவசியம். ஒருவேளை நீங்கள் பிரசங்கி-யாராக இல்லாமல் கூட இருக்கலாம். ஆனாலும் நீங்கள் சத்தியத்தை அறிவித்து உங்களுடைய முன்மாதிரியான கிறிஸ்தவ வாழ்க்கையின் மூலம் அவரை ஈர்க்கலாம் (அப் 8:4; 1பேதுரு 3:15)

5) நீங்கள், உண்மையுள்ள கிறிஸ்தவர்களாக வேண்டும் என்பதே எங்கள் ஜெபம் (வெளி 2:10) நீங்கள் எப்படிப்பட்ட கிறிஸ்த வர்கள் என்று உங்களுக்கே தெரியும். மேற்சொன்ன மாதிரி-யில் உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை இல்லாவிட்டால் தேவையான மாற்றங்களையும் திருத்தங்களையும் செய்து உங்கள் கிறிஸ்தவ அறத்தைத பெருக்கிக் கொண்டு கிறிஸ்து உங்களை எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும் என்று எதிர்பார்க்-கிறாரோ அவ்விதமாய் வாழ முற்படுங்கள். அப்படிச் செய்தால் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். தேவனோடு சதா காலமும் வாழ்வோம் என்ற நம்பிக்கையோடு நீங்கள் இருக்கலாம்.

இப்பொழுது சொல்லுங்கள், மேற்கூறியுள்ள பதிலின்படி நீங்கள் கிறிஸ்தவர்களா? ஒருவேளை உங்கள் பதில் இல்லை என்று கூட இருக்கலாம். நீங்கள் பரிபூரணமான வாழ்க்கை வாழுவீர்கள்

என்று கிறிஸ்துவும் எதிர்பார்க்கவில்லை. நாம் எல்லோரும் மனிதர்கள் என்பது அவருக்குத் தெரியும், ஆனால் உங்களால் முடிந்த அனைத்தையும் உண்மையாகவும் மனசுத்தியோடும் செய்து விட்டு அவரை நோக்கிப் பார்த்தால், மீதியை அவருடைய இரக்கமும், கிருபையும் கவனித்து கொள்ளும். நாம் அனைவருமே இன்றைக் செய்து கொண்டிருப்பதைக் காட்டிலும் இன்னும் முயன்றால் அதிகமாகச் செய்ய முடியும். இந்த தேர்வு நீங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் எங்கே நிற்கிறீர்கள் என்று காட்டுவதற்குமே நீங்க- இன்னும் முயன்று முன்னேற வேண்டும் என்று உற்சாகப்படுத்துவதற்கும் தான். ஆகவே நாம் அனைவரும் இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு நம்முடைய நிலையை பரிசீலித்து நன்மையடைவோமாக!

J.C. சோட்

## சான்றோன் செய்யக் கூடாத ஐந்து

1) நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது அதைச் செய்யத் தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.

2) உன்னிடத்தில் பொருள் இருக்கும் போது உன் அயலானை நோக்கி நீ போய்த் திரும்பி வா, நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே.

3) அச்சமின்றி உன்னிடத்தில் வாசம் பண்ணுகிற உன் அயிலானுக்கு விரோதமாகத் தீங்கு நினையாதே.

4) ஒருவனும் உனக்குத் தீங்கு செய்யாதிருக்க, காரணமின்றி அவனோடு வழக்காடாதே.

5) கொடுமையுள்ளவன் மேல் பொறாமை கொள்ளாதே அவனுடைய வழிகளில் ஒன்றையும் தெரிந்து கொள்ளாதே. நீதி 3 27-31

# என்னிடமிருந்து தேவன் என்ன எதிர்பார்க்கிறார்?

உலகத்தில் உள்ள ஒவ்வொருவரும் பிறரிடத்திலிருந்து எதையாவது எதிர்பார்க்கின்றனர். பெற்றோர்கள் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளிடத்தில் பெற்றோரும், எஜமானிடத்தில் வேலைக்காரர்களும், வேலைக்காரர்களிடத்தில் எஜமானும் தலைவரிடத்தில் தொண்டர்களும், தொண்டர்களிடத்தில் தலைவனும் எதையாவது எதிர்பார்க்கின்றனர். கிறிஸ்தவர்களாகிய நாம் கூட நம்முடைய பரம பிதாவிடத்தில் எதையாவது எதிர்பார்க்கிறோம்.

நம்முடைய தேவனாகிய பிதாவும் இதற்கு விதி விலக்கல்ல அவரும் நம்மிடத்தில் சிலவற்றை எதிர்பார்க்கத்தான் செய்கிறார் அவைகளில் சிலவற்றைக் கீழே கொடுத்திருக்கிறோம்.

**1. அவர் கூறுவதை நாம் கேட்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்.**

மிர்னா சபைக்கு இயேசு அறிவுறுத்துவதைக் கேளுங்கள்:

**''ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்: ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை''**

வெளி. 2:11

பரிசுத்த ஆவியானவர் சபைகளுக்கு அன்று கூறியதை நாம் தெரிந்து கொள்ள ஒரே வழி புதிய ஏற்பாட்டை படிப்பது தான். இன்றைய சபைகளுக்கும் தேவையான ஆலோசனைகளை ஆவியானவர் கூறுவதை புதிய ஏற்பாட்டிலே நாம் காணலாம். மனிதர்கள் எழுதிய புத்தகங்களைப் படித்து, பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கூறுவது எதையும் தெரிந்து கொள்ள இயலாது. சின்ன குறிப்பிடம், பெரிய குறிப்பிடம், சபை ஒழுங்குகள் போன்ற புத்தகங்கள் நிறைய உண்டு. அவற்றைப் படித்து, நம்பி, அவற்றிற்குக் கீழ்ப்படியும் போது நாம் மனிதனுடைய குரலுக்கே செவி சாய்க்கிறோம்; தேவனுடைய வார்த்தைக்கு அல்ல.

**2) அவரை நாம் விசுவாசிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்.**

எபிரேயர் புத்தக ஆசிரியர் எழுதுகிறார் : ''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவன் உண்டென்றும், அவர்

தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பயன் **அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்''** எபி. 11:6. அவருடைய குமாரனையும் நாம் விசுவாசிக்க வேண்டும். என இயேசு கூறினார்.

**''நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்** – யோவான் 8:24. நாம் தேவனை குமாரனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் காட்ட வேண்டும். யாக்கோபு கூறினார் : **''ஒருவன் உனக்கு விசுவாசமுண்டு, எனக்கு கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே** ''யாக் 2:18.

நாம் செய்யும் காரியங்கள் யாவும் விசுவாசத்தில் செய்யப் படவேண்டும். வேதாகமத்தில் காணப்படாதவற்றை, விசுவாசத்துடன் செய்ய முடியாது. **'விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே''**—ரோமர் 14:23

**3. அவரை நாம் தொழ வேண்டும் என எதிர்பார்க்கிறார்**

உண்மையுடனும், ஆவியுடனும் தேவனை தொழுது கொள்ள வேண்டும் என சமாரியா நாட்டுப் பெண் ஒருத்தியிடம் இயேசு கூறினார். **''உண்மையாய்த் தொழுது கொள்கிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது காலம் வரும் அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழு கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும் படி பிதாவானவர் விரும்புகிறார்''** யோவான் 4:23,24 தேவனுடைய கட்டளைக்ளுக்குப் பணிவுடன் கீழ்ப்படிந்து அவரைத் தொழவேண்டும்.

வாரத்தின் முதல் நாளிலே கூடி தேவனின் புகழைப்பாடவும், ஜெபிக்கவும், வசனத்தைப் படிக்கவும், அவருடைய குமாரனின் பந்தியிலே கலந்து கொள்ளவும், நமது வாரத்திற்கேற்ப காணிக்கை செலுத்தவும் என்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

**4. நாவடக்கத்தை நம்மிடம் அவர் எதிர்பார்க்கிறார்.**

**''கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்''**. எபே 4:29. நம்மை விசுவாசத்தில் வளர்க்கக் கூடியவற்றையே

நாம் பேச வேண்டும். நாம் கூறப்போகும் எதுவும் பிறருக்கு
நன்மை பயப்பதாக இல்லாவிடில் அவற்றை பேச வேண்டாம்.
யாக்கோபு எழுதினார் : ''**உங்களில் ஒருவன் தன் நாவை**
**அடக்காமல்' தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை**
**தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய**
**தேவபக்தி வீணாயிருக்கும்''**. யாக் 1:26.

## 5. நேர்மையான வாழ்வை நம்மிடம் அவர் எதிர்பார்க்-கிறார்

''அப்பொழுது பன்னிருவரும் சீடர் கூட்டத்தை வரவழைத்து
நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல் பந்தி விசாரணை செய்-
வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞான-
மும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை உங்களில்
தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்-
படுத்துவோம்''—அப் 6:2,3 உதவியாளராகிய மேற்சொன்ன ஏழு
பேரும் நேர்மையானவர்களாக இருக்க வேண்டுமென்பது அவசியம்
அவர்கள் மட்டும் அன்று. அதுபோல கிறிஸ்தவ மக்கள் அனை-
வருமே நேர்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லத்
தேவையில்லை.

''எல்லா மனிதருக்கும் முன்பாகவும் யோக்கியமானவை-
களைச் செய்ய நாடுங்கள்'' என கிறிஸ்தவர்கள் அறிவுறுத்தப்-
படுகின்றனர். ரோமர் 12:17

## 6. முதலாவதாக இராஜ்ஜியத்தை நாம் தேட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்

''முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய
நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்-
குக் கூடக் கொடுக்கப்படும்'' —(மத் 6:33) என இயேசு போதித்-
தார். பரலோக இராஜ்ஜியம் என்பது கிறிஸ்துவின் சபை வேலைக்-
கடுத்த சகல காரியங்களுக்கும் முதலிடம் தர வேண்டுமென தேவன்
நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார்.

ஞாயிறு ஆராதனையில் நாம் தவறாது கலந்து கொள்ள
வேண்டும். பொழுது போக்காக மீன் பிடிக்கச் செல்வதையோ
தொலைக்காட்சி பெட்டியின் முன் தவங்கிடப்பதையோ ஞாயிற்றுக்
கிழமைகளில் தெரிந்து கொள்ளாமல் ஆராதனைக்குச் செல்வதை
முதல் கடமையாகக் கொள்ள வேண்டும். ஆபாச புத்தகங்களைப்
படிப்பதைத் தவிர்த்து, பரிசுத்த வேதாகமத்தை அடிக்கடி படிக்க
வேண்டும். எத்தனை முறை படித்தாலும், ஒவ்வொரு முறையும்
நமக்கு புதுப்புது விஷயங்களை அள்ளித்தந்து நம் வாழ்வை நல்-

*வழிப்படுத்த தேவன் நமக்கு அளித்த அருமையான பொக்கிஷ-மாயிற்றே வேதாகமம்!*

*பரிசுத்தமான வாழ்க்கைக்கான முயற்சிகளைத் தேடுவது நமது அன்றாட செயல்பாடாக அமைய வேண்டும் ஏனெனில் ''யாவரோடும் சமாதானமாக இருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களா-யிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை''—எபி 12:14, என வேத வசனம் கூறுகிறது.*

**W.C. ஆண்டர்சன்** **தமிழில் : S.S. ராஜன்**

---

## இளைஞர்களே, கீழ்ப்படிந்து நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்

இளைஞரே மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள் நீங்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து மனத் தாழ்-மையை அணிந்து கொள்ளுங்கள்.

பெருமை கூடாது, ஏன்? பெருமையுள்ளவர்களுக்கு தேவன், எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்-கோ கிருபை அளிக்கிறார். ஆகையால் ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள்.

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்-திருங்கள், ஏனெனில் உங்கள் எதிரொளியாகிய பிசா-சானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்-கலாமோவென்று சுற்றித் திரிகிறான்.

விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்.

# ஒரு சிறந்த மனைவி/தாயின் பண்புகள்

(நீதி 31:10-31)

பழைய ஏற்பாடு எபிரேய மொழியில் எழுதப்பட்டது என்று நாம் அறிவோம் இதில் மொத்தம் 22 எழுத்துக்கள் உள்ளன. அந்த 22 எழுத்துக்களில் முதல் எழுத்து ஆலெப் கடைசி எழுத்து ''தவ்''. நாம் பார்க்கப்போகிற நீதிமொழிகள் 31-ம் அதிகாரம் 10-ம் வசனம் தொடங்கி அதன் கடை வசனம் 31 வரைக்கும் ஒவ்வொரு வசனத்துக்கும் அந்த 22 எழுத்துக்களும் வரிசையாக பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. அதே போல 119-ம் சங்கீதத்தில் காணப்படும் உட் பிரிவுகளின் தலைப்புக்கும் இந்த எரேபிய எழுத்துக்கள் 22-ம் பயன் படுத்தப்பட்டிருக்கின்றன.

நீதி மொழிகள் எழுதப்பட்டு சுமார் 3000 ஆண்டுகளாகிவிட்டன. ஆயினும் அதில் கூறப்பட்டுள்ள சிறந்த மனைவி-தாய்மார்களுக்கு உரிய நற்பண்புகள் இன்றைக்கும் பொருத்தமானதாகவே இருக்கிறது ஆகவே வாசித்து தியானித்து பயனடைவோமாக

**1. சிறத்தவள்— விலைமதிப்புள்ளவள்**

நீதி 31:10: ''குணசாலியனா ஸ்திரீயை கண்டு பிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது''

தேவன் பெண்ணை மனிதனுக்குத் துணையாக இருக்கும்படி படைத்தார். (ஆதி 2:18) பண்புள்ள மனைவியைப் பெற்றுக் கொள்கிறவன் பாக்கியவான் (நீதி 18:22)

**2. நம்பிக்கைக்குப் பாத்திரமானவள்**

வசனம் 11. ''அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும், அவன் சம்பத்துக்குறையாது''

அப்படிப்பட்ட மனைவி நம்பிக்கைக்குப் பாத்திரமுள்ளவளய் இருக்கின்றபடியால், நியாமான காரியங்களில் அவள் உண்மையாக இருப்பாள் என்று கணவன் நிம்மதியாக இருப்பான் (சங் 128:3,4)

**3. எப்போதும் எந்த சூழ்நிலையிலும் உறுதுணையாக இருப்பாள்.**

வசனம் 12. ''அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையை அல்ல, நன்மையையே செய்கிறாள்''

அதனால் அன்றே, குணசாலியான ஸ்திரீ கணவனுக்குக் கிரிடமாக இருக்கிறாள்'' என்று வேதம் உத்தம மனைவியைப் பாரட்டுகிறது (நீதி 12:4)

**4. ஆர்வமுள்ள உழைப்பாளி**

வசனம் 13. ''ஆட்டுமயிரையும், சணலையும் தேடி, தன் கைகளி னால் உற்சாகத்தோடே வேலை செய்கிறாள்''

ஒரு பொருப்புள்ள மனைவிக்கு எதையும் சொல்ல வேண்டிய அவசியம் இருக்காது. எதை எதை, எப்போது, எப்படிச் செய்ய வேண்டும் என்று குறிப்பறிந்து தானே செய்து முடிப்பாள்.

**5. திரை கடல் ஓடியும திரவியம்தேடு என்ற மனப்பாங்கு உள்ளவள்.**

வசனம் 14 ''அவள் வியாபாரக் கப்பலைப் போல இருக்கிறாள், தூரத்தில் இருந்து தன் ஆகாரத்தைக் கொண்டு வருகிறாள்''

அவள் கருத்தாய், சிரமத்தைப் பாராமல், குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் என்னென்ன தேவைகள் என்று அறிந்து அதைக் தேடிக்கொண்டு வருகிறாள்.

**6, கடைசியில் படுத்து, முதலில் எழுந்திருப்பாள்**

வசனம் 15. ''இருட்டோடே எழுந்து, தன் வீட்டாருக்கு ஆகாரம் கொடுத்து தன் வேலைக்காரிகளுக்குப் படியளக்கிறாள்''

எவ்வளவு அலுப்பாக இருந்தாலும், தன் கடமைகளைக் காலையில் தொடங்கி படுக்கப் போகும் வரை பம்பரமாய்ச் சுழன்று கவணிப்பாள்.

**7. குடும்ப முன்னேற்றமே அவர் மூச்சு**

வசனம் 16. ''ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள். தன் கைகளின் சாமர்த்தியத்தினால் திராட்சைத் தோட்டத்தை நாட்டுகிறாள்''

குடும்ப முன்னேற்றத்தில் கணவனுக்கு உறுதுணையாக இருப்பதுடன் தன்னுடைய சுய முயற்சியினால் சில சேமிபுகளைச் செய்தும், பண்டங்களைக் கொள்முதல் செய்து விற்றுப் பொருள் சேர்க்கிறாள்.

**8. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை நடைமுறையில் கடைப்பிடிக்கிறாள்.**

வசனம் 17. ''தன்னை பெலத்தினால் இடைக் கட்டிக் கொண்டு, தன் கைகளை பலப்படுத்துகிறாள்.

நாளுக்கு ஒரு வியாதியால் பாதிக்கப்பட்டு, மருத்துவர்களுக்குப் பெருந்தொகையை மாதா மாதம் கொடுத்துக் கொண்டிராமல் நல்ல முறையில் உடல் நலத்தைப் பேணிக் காத்துக்கொள்கிறாள்.

**9. முயற்சி திருவினை ஆக்கும் என்று நம்பிக்கையுடன் இருப்பாள்.**

வசனம் 18. ''தன் வியாபாரம் பிரயோசனமுள்ளது என்று அறிந்திருக்கிறாள். இரவில் அவள் விளக்கு அணை-யாதிருக்கும்''

தன் முயற்சியின் பலன், கஷ்ட நேரங்களில் எவ்வாறு கை-கொடுக்கிறது என்று அறிந்திருக்கிறபடியால் எந்த சூழ்நிலை வந்-தாலும் சமாளிக்க அதிக நேரம் உழைக்கிறாள்.

**10. பல்கலை பயின்ற வல்லுநர்**

வசனம் 19. ''தன் கைகளை இராட்டினத்தில் வைக்கிறாள். அவள் விரல்கள் கதிர்களைப் பிடிக்கும்''

இந்த வேலை தான் தெரியும், இது தெரியாது என்றே கிடை-யாது. பொத்தான் தைப்பதிலிருந்து போரடிக்கிற வேலை வரை அனைத்து வேலைகளையும் செய்துகுடும்பத்தின் எந்த தேவை களுக்கும் மற்றவர்கள் கையை எதிர் பார்க்க மாட்டாள்.

**11. நல்ல சமாரியன் கொள்கையுடையவள்**

வசனம் 20. ''சிறுமையுள்ளவர்களுக்கு தன் கையைத் திறந்து, ஏழைகளுக்கு தன் கரங்களை நீட்டுகிறாள்''

தன்னுடைய குடும்ப அலுவல்களைக் கவனிப்பதோடு திருப்திப் பட்டுக் கொள்ளாமல், தேவைப்படுகிறவர்களுக்கு உதவி செய்-வதிலும் இன்பம் காண்கிறாள்.

**12. அவள் குரங்கு அல்ல - தூக்கணாங்குருவி**

வசனம் 21. தன் வீட்டார் அனைவருக்கும் இரட்டைப்புரை உடுப்பு இருப்பதால் தன் வீட்டாரினிமித்தம் குளிருக்-குப் பயப்படாள்''

தன்னுடைய கணவன், பிள்ளைகள், வேலைக்காரர்கள் ஆகிய அனைவருக்கும் எல்லா சீதோஷ்ண நிலைக்கும் தேவை-யான ஆடைகளைச் சேகரித்து வைத்திருப்பதால் எப்படிப்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் கலங்காமல் இருப்பாள்,

**13. தகுதியான உடையலங்காரம்**

வசனம் 22. ''**இரத்தினக் கம்பளங்களைத்** தனக்கு உண்டு பண்ணுகிறாள். மெல்லிய புடவையும், இரத்தாம்-பரமும் அவள் உடுப்பு''

அலங்கோலமாகக் உடுத்திக் கொண்டு, அதற்கு நாகரீகம் என்ற போர்வை போர்த்தி, மாயம் பண்ணாமல் சமுதாயம் ஏற்றுக் கொண்டு மதிக்கக் கூடிய உடையலங்காரம் செய்து கொள்வாள்.

**14. மதிப்புக்கும், கண்ணியத்துக்கும் உரியவள்**

வசனம் 23. ''அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாய-
ஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர் பெற்ற-
வனாயிருக்கிறான்''

அவளுடைய நற்பண்பு, சாமர்த்தியம், ஒழுக்கக்கட்டுப்பாடு ஆகியவைகளின் காரணமாக, சமுதாயத்தில் அவளுடைய கணவனுக்கும் மரியாதையும் செல்வாக்கும் கிடைக்கிறது.

**15. சாமர்த்தியமும் வியாபார நோக்கும் உள்ளவள்**

வசனம் 24. ''மெல்லிய புடவைகளை உண்டு பண்ணி விற்கிறாள்
கச்சைகளை வர்த்தகரிகித்தில் ஒப்புவிக்கிறாள்''

குடும்பம் நடத்துதில் தான் கெட்டிக்காரி என்றில்லை. வெளி விவகாரங்களையும் கூடப் புரிந்து கொண்டு, அதற்கேற்ற முறையில் செயல்பட்டு பொருள் ஈட்டுவாள்.

**16. வாழ்க்கையில் கண்ணியமும், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையும் அவள் சொத்து**

வசனம் 25. ''அவள் உடை பலமும் அலங்காரமுமாயிருக்கிறது.
வருங்காலத்தைப் பற்றியும் மகிழுகிறாள்.

தன்னுடைய வியாபாரப் பெருக்கம், தொழில் முயற்சியில் வெற்றி ஆகிய காரியங்கள் அவளுக்கு வாழ்க்கையில் தெம்பையும், உற்சாகத்தையும் ஊட்டி எதிர்காலத்தைப் பற்றிக் கவலையில்லாமல் இருக்கிறாள்.

**17. விவேகமும் அன்பும் நிறைந்தவள்**

வசனம் 26. ''தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்;
தயையுள்ள போதகம் அவள் நாவில் இருக்கிறது''.

அனுபவத்தின் மூலம் அவள் பெற்றுக் கொண்ட ஞானம், சகிப்புத் தன்மை, புத்திசாலித்தனம் ஆகியவைகளைப் பிரயோகித்து பிரச்சனைகளை அணுகுவதில் வெற்றி பெறுகிறாள்.

**18. புத்திக் கூர்மையும், சுறுசுறுப்பும் உள்ளவள்**

வசனம் 27. ''அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன்
வீட்டுக் காரியம் எப்படி நடக்கிறது என்று கண்-
ணோக்கமாயிருக்கிறாள்''.

மனைவியாகவும் தாயாகவும் அவளுடைய புத்திக்கூர்மையானது, அவளுடைய குடும்பத்துக்குப் பெரும் துணையாகவும், வழிகாட்டியாகவும் இருந்து வெற்றி வாழ்க்கை வாழுகிறாள்,

## 19. பாராட்டுக்குரியவரும், ஒப்புவமையில்லாதவளு-மாய் இருக்கிறாள்

வசனம் 28,29. ''அவள் பிள்ளைகள் எழும்பி அவளைப் பாக்கியவதி என்கிறார்கள் அவள் புருஷனும் அவளைப் பார்த்து, அநேகம் பெண்கள் குணசாலியாயிருந்ததுண்டு நீயோ அவர்கள் எல்லோருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான்''

மேற்சொன்ன அனைத்துப் பண்புகளையும் உடைய தாயாகவும், மனைவியாகவும் விளங்கும் ஒரு பெண்மணியை பிள்ளைகள் வாழ்த்தாமலும், புருஷன் பாராட்டாமலும் இருப்பது எப்படி?

## 20. தேவபக்தியும் பயமும் உள்ளவள்

வசனம் 30. ''சௌந்தர்யம் வஞ்சனையுள்ளது; அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்''

தேவனுக்குப் பயந்து நடக்கிற பெண்மணி புகழப்படுவாள் அவள் தன் தேவனோடு ஒன்று பட்டு வாழ்வதினால் இப்படிப்பட்ட அரும் குறைதிசயங்களைப் பெற்றிருக்கிறாள்.

## 21. பேறுக்கும், புகழ்ச்சிக்கும் பாத்திரமானவள்

வசனம் 31. ''அவள் கைகளின் பலனை அவளுக்குக் கொடுங்கள் அவளுடைய செய்கைகள் வாசல்களில் அவளைப் புகழக்கடவது''

அவள் செய்கிற, செய்துள்ள காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்க்கும்பொழுது, அவள் எல்லாவிதமான பாராட்டுக்கும் தகுதியுள்ளவள். அவள் குடும்பத்தாரும், மற்றவர்களும் அவளைப் புகழ்வார்கள்.

லேமுவேலின் தாயார் அவனுக்கு உபதேசித்துச் சொன்னதைக் கருத்தில் கொண்டு, கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஒவ்வொரு கணவனும், தங்கள் மனைவிமார்களின் / தாயாரின் நற்பண்புகளைப் பாராட்ட வேண்டும். ''புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து .. அதற்காக ஒப்புக் கொடுத்தார் (எபே 5:25) கிறிஸ்துவத் தாய்மார்கள் தீமோத்தேயுவின் தாயார் மற்றும் பாட்டியைப் போன்று, தங்களுடைய பிள்ளைகளுக்கு தேவனுடைய வார்த்தைகளைச் சிறு வயதிலிருந்தே போதிக்க வேண்டும். (2தீமோ 1:5;3:15) தங்களுடைய பெண்பிள்ளைகளுக்கு ஒரு சிறந்த மனைவி எப்படி இருக்க வேண்டும் என்கிற விஷயங்களைச் சிறு பிராயத்திலிருந்தே கற்றுத் தர வேண்டும் (தீத்து 2:3-5) அதே

போல ஆண்மக்களுக்கு மற்ற பெண்களை எல்லாக் கற்புடனும், சகோதரிகளாகப் பாவிக்கவும் (1தீமோ 5:2) தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும், உபதேசத்தில் விகற்பமில்லாமலும், நல்லொழுக்கமுள்ளவனும், குற்றம் பிடிக்கப் படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனாகவும் இருக்கக் கற்பிக்க வேண்டும். (தீத்து 2:6,7)

E.Z. செல்வநாயகம்

## வெவ்வேறு இரண்டு வழிகளும் அதன் முடிவுகளும்

நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்,

துன்மார்க்கருடைய பாதையோ இருளைப் போல் இருக்கும். தாங்கள் இடறுவது இன்னதில் என்று அறியார்கள், நீதி 4:18,19

## மூப்பர்களே, முன்மாதிரியாயிருங்கள்

உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல-மனப்பூர்வமாயும் அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல - உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல - மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள்.

அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பன் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்.

# உயிர் இரத்தத்தில் இருக்கிறது.

லேவியராகமம் 17:11 மாம்சத்தின் உயிர் இரத்தத்திலிருக்கிறது என்று கூறுகிறது. மனிதனுடைய இரத்த ஓட்டத்தின் தன்மையைக் கவனிக்கும்போது இது எத்தகைய பேருண்மை என்பதை உணரமுடியும். நம்முடைய உடம்பில் உள்ள இரத்த நாளங்கள் சுமார் 60,000 மைல் பயணம் செய்து நம்முடைய உடம்பில் உள்ள டிரில்லியன் உயிர் அணுக்களைப் பாதுகாக்கிறது. இந்த தூரம் ஒரு விமானம் $2\frac{1}{2}$ முறை உலகத்தைச் சுற்றி வருவதற்கு சமானம். டிரில்லியன் என்பது உலகத்தின் மக்கள் தொகையை 12000 முதல் 20000 முறை பெருக்கினால் வரும் தொகைக்குச் சமானம். உங்களுடைய உடம்பைப் பேணிப் பாதுகாக்க சிவப்பு உயிர் அணுக்கள் புரதம், வைட்டமின், தாதுப்பொருள்கள் போன்ற உயிர்ச்சத்து உள்ளடக்கிய பிராணவாயுவை ப்ளாஸ்மா (plasma) என்ற திரவமாக எடுத்துச்செல்கின்றன. நம்முடைய சரீரத்தில் உள்ள ஒவ்வொரு உயிர் அணுவிலும் நம்முடைய சரீரத்துக்கு தேவையானவைகள் எவை எவை என்ற பட்டியல் இருக்கிறது. இரத்த நாளங்கள் அவைகளை விநியோகிக்கும் பொறுப்பை ஏற்கிறது.

நம்மைப்பாதுகாக்க வெள்ளை உயிர் அணுக்கள் என்னும் போர் வீரர்கள், நோய்கிருமிகள் இரத்த நாளத்தில் பிரவேசித்து நம்முடைய உடல் நலத்துக்கு ஊறு விளைவித்து விடாதபடி அவைகளைத் தாக்கி அழித்து விடுகின்றன. அவைகளை எளிதில் அழித்துப்போட மந்தை மந்தையாக தாக்குகிறது. சில வெள்ளை உயிர் அணுக்கள் இப்படிப்பட்ட யுத்தத்தில் மாண்டு போவதும் உண்டு. ஆனாலும் கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை. அதை ஈடுகட்ட வேறு உயிர் அணுக்கள் விரைவில் உற்பத்தி ஆகிவிடும். யுத்தத்தில் மடிந்துபோன நோய்கிருமிகளும் போர் வீர வெள்ளை உயிர் அணுக்களும் அற்புறப்படுத்தப்படும். இந்த யுத்தங்களில் பெருபான்மையான சமயங்களில் வெள்ளை உயிர் அணுக்களே வெற்றி வாகை சூடுகின்றன. நம்முடைய சரீரத்தில் என்ன நடக்கிறது என்று நமக்குத் தெரியாமலேயே இந்த யுத்தங்கள் அமைதியாக நடந்து முடிந்து விடுகின்றன. நம்முடைய விரலில் வெட்டுப்பட்டு விட்டாலோ அல்லது காயம் பட்டுவிட்டாலே ''ப்ளேட்டாலெட்ஸ்'' (platelets) என்று அழைக்கப்படுகிற வட்டமான ஒரு பொருள் அந்தக் காயத்திலிருந்து இரத்தம் வருவதைத் தடுத்து நிறுத்த விரைகின்றது. பிப்ரின் (Fibyin) என்ற வேறொரு பொருள் கொண்டு அந்தக் காயத்தை ஆற்ற இரத்தம்

முற்படுகிறது. பிப்ரின் எப்போதுமே இரத்த நாளத்தில் இருப்பதில்லை. அப்படி எப்போதும் இருந்தால் இரத்த நாளத்தையே அடைத்துப் போடும். ஆகவே தேவைப்பட்ட பொழுதுதான் அது உற்பத்தியாகிறது.

நம்முடைய இரத்த நாளங்கள் என்பது ஆர்டரிஸ், நரம்புகள் கேப்பிள்ளரிஸ் என்ற நுண்ணிய குழாய்கள் போன்ற பொருள்களினால் ஆனது. இதயம் இரத்தத்தை ஆர்டரிஸ்க்குள் அனுப்புகிறது. அது ஒருவிதமான தசைநார். அது இரத்தம் சீராக ஓடுவதற்கு அதை அழுத்தியும் இறுக்கியும் உதவுகிறது. பிறகு இரத்தம் கேபிள்ளரிஸ் (Capillaries) என்ற நுண்ணிய குழாய் வழியாகப் பயணம் செய்கிறது. அலைகளுக்குள் சிவப்பு அணுக்கள் ஒவ்வொன்றாகத்தான் போக முடியும் அவ்வளவு நுண்ணியது! இறுதியாக உங்கள் நரம்புகளை இறுக்கி பிழிகிற தசைநார்களால் உந்தப்பட்டு மீண்டும் இருதயத்தில் வந்து சேர்கிறது.

மீண்டும் இரத்தம் வெளியில் அனுப்பப்படுவதற்கு முன்பு அது புதிய பிராண வாயு பெற்றுக்கொள்ள நுரையீரலுக்கு அனுப்பப்படுகிறது. நமக்கு ஊட்டமளிக்கவும் பாதுகாக்கவும், இரத்தம் இவ்விதமாய் செயல்பட தவறினால் நாம் இறந்து போவோம்.

ஆம் தம்பி தங்கைகளே! உயிர் இரத்தத்தில் இருக்கிறதென்று வேதாகமம் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருப்பது எவ்வளவு உண்மை! இந்த அற்புதமான இரத்த ஓட்டத்தை ஒழுங்கு படுத்தியவர்தான் நமக்கு வேதாகமத்தையும் கொடுத்திருக்கிறார்.

சென்ற ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இந்த உண்மை மருத்துவ மேதைகளுக்கும் தெரியாமல் போனதால் இரண்டாம் உலகமாக யுத்தத்தில் காயம்பட்ட அநேக விஞ்ஞானிகள், தளபதிகளின் இரத்தம் உடம்பிலிருந்து வெளியேறிவிட்டதால் மாண்டு மண்ணாய் போனார்கள். இந்த பேருண்மை மருத்துவர்களாகிய எங்களுக்கு தெரிந்திருந்தால் அம் மாபெரும் மனிதர்களையெல்லாம் பிழைக்க வைத்திருப்போமே என்று புலம்பினார் ஒரு மருத்துவ மேதை.

இது போன்ற அநேக பேருண்மைகளையும் வாழ்க்கை சட்டங்களையும் உள்ளடக்கிய வேதாகமத்தை நீங்கள் தினமும் வாசித்து தியானித்து பயனடைய வேண்டும் என்பதே என் விருப்பமும் ஜெபமும். நினைவிருக்கட்டும் எங்கே ஒரு உருவமைப்பு (design) இருக்கிறதோ அங்கே அதை உருவமைத்த ஒருவர் இருப்பது நிச்சயம். நம்மை படைத்தவர் எவ்வளவு சிறந்த சிருஷ்டி கர்த்தா!

**பெட்டி ஜாக்ஸன்** **ராக்கேல் நாயகம்**

YOUR ATTENTION PLEASE !

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi -110049
Thursdays-7: 15 to 7-30 P. M.
Fridays-- 8: 00 to 8:15 P. M.
Saturdays-8 00 to 8:15 P. M.
Sundays-9 00 to 9: 15 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## நெல்லை வ.உ.சி. குமரி மாவட்ட வாசகர்களுக்கு ஓர் அன்பு வேண்டுகோள்.

மார்ச் மாத இதழிலும் தனியாக உங்களுக்கு அனுப்பப் பட்ட ஜெப அட்டையிலும் கண்டுள்ளபடி நீங்கள் அனைவரும் மே மாதம் பாளையங் கோட்டையில் நடைபெறும் வாசகர்கள் கருத்தரங்க வெற்றிக்காக ஜெபித்துக் கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறோம்.

இம்மாவட்டங்களிலும், மற்ற இடங்களிலும் இருந்து எத்தனை பேர் வரக்கூடும் என்று ஒரு கணக்குத் தெரிந்தால் அவர்களுக்கு இடவசதி மற்றும் சௌகரியங்கள் செய்ய வசதியாக இருக்கும். ஆகவே கலந்து கொள்கிறவர்கள் தொடர்பு கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம்.

**சகோ. தாமஸ் டேவிட்**
கிறிஸ்துவின் சபை
21 E பால்ஸ் ரோடு
பாளையங் கோட்டை - 638 702.

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press Erode-638 003.

Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
**THIRUMARAI AASAAN**
Post Box No: 58 ERODE - 638 001.